படகுகளையும், மீனவர்களுடைய உரிமைப் பொருள்கள் அத்தனையையும் உடனுக்குடன் மீட்டுக் கொடுத்தவர்தான் நம்முடைய தமிழக வரலாற்று முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இலங்கை இராணுவத்தின் அராஜகத்தினால் இலங்கைத் தமிழர்கள் உயிரை இழந்து, உடைமைகளை இழந்து, சொந்தங்களை இழந்து, சுகங்களை இழந்து, மகிழ்ச்சியான முகங்களை இழந்து முகாம்களில் தங்கியிருக்கிறார்கள். அந்தத் தமிழர்களுக்கு உங்களால் உதவி செய்ய முடியவில்லை என்றாலும்—உதவி செய்வதற்கு மனம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்—அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவேண்டும் என்று மத்திய அரசுக்குக் கடிதம் மட்டும் எழுதிக்கொண்டிருக்கிறீர்கள். அவர்களும் இன்றுவரை முகாம்களில்தான் தங்க வைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெறும் கடிதங்கள் இலங்கைத் தமிழர்களின் கவலைகளை மாற்றிவிடாது. நீங்கள் நினைத்திருந்தால், உண்மையாகவே அவர்கள்மேல் அக்கறைப்பட்டிருந்தால் இலங்கைத் தமிழர்களுக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காது என்று உலகத் தமிழர்கள் எல்லாம் இன்று மிகப் பெரிய வருத்தத்திலே இருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் நடத்திக்கொண்டிருக்கிற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இலங்கைத் தமிழர்களைப் பற்றி இவ்வளவு கரிசனத்தோடு நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் பேசுவது என்னுடைய மனதையே உருக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்டபோது, ‘யுத்தம் என்றால் அதில் இப்படி பொதுமக்கள் கொல்லப்படுவது சகஜம்தான்’ என்று சொன்ன அந்தக் குரல் ஒலித்ததை, அது யாருடைய குரல் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.